மனிதாபிமானப்
படைப்பாளிகளின்
முற்போக்குச்
சிந்தனைக்களம்

அக்னி

2

1975 செப்ட 95 சதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REMEMBER

Ravi Tailors

11, Bauddhaloka Mawatha,
(Bullers Road)
Colombo-4.

SUITS

SHIRTS ETC.

FOR GENTS

பிரபல விமர்சகர்

-ஞானி-

எழுதிய

கலை-இலக்கியம்

36 தத்துவப்பார்வை

விலை ரூபா 2/-

வேள்வி வெளியீடு

141, தாமஸ்புரம்,
சிங்காநல்லூர், கோவை 641005.

விரைவில் மேடையேறுகின்றது

இளம் சிட்டுக்களின்
இரு நாடகங்கள்

ஜோகிம் பெர்னன்டோ எழுதிய

இருட்டினில் குருட்டாட்டம்

ஆ. த. சித்திரவேல் எழுதிய

செவ்வானத்தில் ஒரு...

- நாடகப் பரிசோதனைக் களத்தில் புதிய முயற்சி!
- இலங்கை வானொலி புகழ் நாடகக் கலைஞர்களின் கலையாக்கங்கள்



தண்ணீரைத் தாண்டாத தரை மீன்கள்

அக்னியில் வெளியாகும் சிருஷ்டிகள் அதனைப் படைத்த இலக்கிய கர்த்தாக்களின் பொறுப்பு என்ற கம்பீரியத்தைச் சார்ந்ததாகும்.

இலக்கிய மோசடிக் காரர்களின் தன்னிச்சையான அவசங்களால் ஒரு சமுதாய மாற்றத்தை ஏற்படுத்த முடியாது.

புதுமையின் மணிவயிற்றில் கருக்கொண்ட புதுயுகத்தைப் பிரசவிக்கக் கூடிய கலை - இலக்கியங்களே காலத்தை நிர்ணயம் செய்யும், சரித்திரத்தை உருவாக்கும்.

கோபம் கொண்ட மக்கள் பிரச்சினையின் நீர்வுக்காகப் போராடும் ஆக்க இலக்கியவாதிகளே, தமது புதிய புதிய யுக்திகள் தோற்றமெடுக்கும் எழுத்துக்களால் பரிணமை வளர்ச்சிக்குப் பாதை சமைக்கின்றனர்.

பின்தள்ளப் பட்டு வரும் மக்கள் பிரச்சினைகளுக்கு உள்ளாக்கப்பட்ட ஒரு சமுதாயத்தில் கலை - இலக்கியமானது சரிப்படுத்தலுக்கும், சமப்படுத்தலுக்குமான ஒரு சாதகமாகாமல் அதன் மாற்றத்தை உணர்ந்து செய்யப்படும் மாறுதலுக்கான சாதகமாக அமையவேண்டும்.

இந்த நாட்டில் நிலவும் மிகக் கொடுமையான சமுதாய நியாயங்களை எதிர்த்தும், இந்த உக்கிப்போன அமைப்பைக் காக்கும் பேர்வழிகளை எதிர்த்தும் புதிய சமுதாய அங்கீகாரத்தை மக்களுக்கு அளிக்கும் இலக்கியங்களே இன்றைய தேவைகளாகும். தண்ணீரைத் தாண்டாத தரை மீன்களான இலக்கியவாதிகளால் இலக்கியத்திற்கோ அன்றி இந்த நாட்டிற்கோ எந்த வித நன்மையும் ஏற்படப்போவதில்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கரையேறுப் படகுகள்

- மேமன் கவி -

சாக்கடையில் மிதக்கும்
சந்தன கட்டைகளாய்
சேற்றில் பிறந்த
செந்தாமரைகளாய்
கண்ணன்களுக்கு
ஏங்கும் ராதைகளாய்
இருக்கும் எங்களை
சீதனப்பேய்
ஒருபக்கம்
குதறிதின்ன

அழகின்மை
இன்னொரு பக்கம்
அழிக்கும் பொழுது

எங்கள்
இதயக்கடலில்
எங்கள்
ஆசைப் படகுகள்
மூழ்கிட

"புதுயுகம் சமைக்க
வந்த புத்தி ஜீவிகள்
நாங்கள்" என
உங்களை பிரகடனப்
படுத்தும் காளையரே

மேனியை மறைக்க
ஆடையின்றித்விக்கும்
எங்களை நீங்கள்
கைப்பிடிக்காமல்
வாதம் பேசுவதால்
நாங்கள்
சிவப்பு
மலர்களாய்
மாறிப் போனோம்,

அன்று-
கண்ணகி பொங்கி
எழும்பொழுது
மதுரை எரிந்தது போல்
இன்று-

எங்களுக்கு கோவலர்கள்
கிடைக்காமையால்
நாங்கள் நவீன
கண்ணகிகளாய் மாறி
பொங்கி எழப் போகின்றோம்

அப்பொழுது-
எங்களை கரை யேற்றா
இந்தபிற்போக்குச்
சமூகம்
எரிந்து சாம்பலாகி
எங்கோ
மறைந்துவிடும்!

வெற்றி

ச. வாசுதேவன்

நாங்கள்
ஜனனப் பூக்களின்
புனித வண்டுகள்
எங்களின் ஆசை!
ஜனனம் மரிக்குமுன்
யமுனைகள் வற்றுமுன்
சேற்றுப் பூவெனும்
செந்தாமரையுடன்
காட்டுப் பூக்களும்
தாழம் பூக்களும்
எங்களின் வேட்டையில்
சேர்ந்திடவேண்டும்
நாங்கள் -
ஜனனப் பூக்களின்
புனித வண்டுகள்
எங்களின் ஆசை
தேனையுண்டு சுகிப்பதல்ல
தேடியலைந்து பெறுவதுமட்டே.

விருந்து

திக்குவல்லை - கமால்

ஒளிச்சுடர் விழிசிரிக்க
உன் கைகள் -
படைத்தளித்த
இடியப்பம்... மீன் குழம்புச்
சிறு விருந்தை
எப்படித்தான் மறப்பதுவோ?

வாத்தியங்கள் முழங்க,
மின் குமிழ்கள் பளபளக்க
பெரும்மாடி வீடுகளில்
வகை வகையாய்-
சுவைத்து...
மறந்த
எத்தனையோ விருந்துகளின்
சுவடும்தான் தெரியவில்லை!

ஆனால்-
மழைத்தூறல் சுரசரக்கும்
ஓரிரவில்...
மண்ணெய் விளக்கொளிரும்
சிறு குடிலில்...
இராப் பூச்சிகள்
எங்கெங்கோ இருந்தெல்லாம்
சப்தங்கள் எழுப்புகையில்,
நீ படைத்த
இடியப்பம்... மீன்குழம்புச்
சிறு விருந்து...
இன்னுந்தான்
நெஞ்சத்தில் இனிக்கிறது.

இளமை உணர்வுகளை
எங்கோ ஒதுக்கிவைத்து,
பசிக்குரலைத் தலாட்ட
மண்வெட்டி கரம் தூக்கும்,
ஏழைப்பெண் நீபடைத்த
இடியப்பம்... மீன்குழம்புச்
சிறு விருந்து...,
நினைக்கையிலே,
நெஞ்சமெலாம்
விருந்தாய் விரிகிறதே...?
அதை
எப்படித்தான் மறப்பதுவோ?
வழியிருந்தால்
நீயேதான் சொல்லிவிடு!

கொடுமைகள் மடியும்

வஸீகரன்

கச்சிதமான அரங்கை
நிர்மாணிப்பதற்காக
நாங்கள்—
காலூன்றி நிற்பதனால்
மாரீசக் கிரீடங்கள்;
எங்களைக் கீழ்சாதிகள்
என்று—
தப்பாக நினைத்து
குந்தகங்களைக்
குதூகலமாய்ப் பிரசவித்து
வேலேறிய வெந்த புண்ணில்
மேலும் வேலை வீசுகின்றன;
பாழ் வீட்டில் முடங்கி
கூழ் குடித்து
ஜீரணித்துக் கற்ற
பாடங்கள்—
கூர்மை பெற்று
கெட்டியான பாதைக்கு
எம்மை அழைக்கின்றன!
அதனால்—
கேடுகளின் மொத்தமான
கையிருப்புகளும்
சுரண்டிக் கொழுத்து
அலங்கார உலாவரும்
கொடுமைகளின்
கோர வடிவங்களும்
தமது—
கௌரவத்தை
இழந்து நிற்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனங்கண்டு கொண்டோம்!

சபா. சபேசன்

எமக்காய் பரிந்து
பணிந்து-
கோஷங்கள்
கோரிக்கைகள்
எழுப்புகின்ற
இந்தமண்ணின்
தலைமைகளே...!
உங்களை நாம்
இனங்கண்டுகொண்டோம்!

கடைச்சரக்குகளாய்
காவல்வேலிகளாய்
எங்கள்உணர்வுகளை
இட்டுவைத்திருக்கும்
இனியநண்பர்களே!
உங்களையுந்தான்...!
இரத்தச்சிவப்பின்
இனிய செழுமையை
நீங்கள் நன்றாய்
உணரும்காலம்

நிச்சமாய் உண்டு!

இனத்துவேச-
ஏவல்களில்
ஈனசங்கார நாதமிடும்
ஈழமாதாவின்
இழிபிறப்புக்களே
ஓ! பிரிமுளைகளே
நீங்கள் தான் எங்கள்
முதல் எதிரிகளாக
எங்கள் வேள்வியில்
துவம்சம்செய்யப்படுவீர்கள்!

அதிகார வெறியில்.
ஆட்சி இறைச்சிக்காய்
எச்சில் நாய்களாய்
இரைந்து குரைத்து
எம்மை ஏமாற்றும்
பச்சைவாதங்களே
பணக்காரக் கும்பலே
எங்களை விற்றுப்பிழைத்த
எஜமானர்களே
இங்கே உங்களுக்காய்
எம்மிடம்எந்த
இடங்களேயில்லை.

பாசிசத்தைவிரட்டவென
தேசியத்துள் சருகிமறையும்
சுரண்டல் குப்பல்காள்
வர்க்கமுரண்பாட்டை
மறைத்து நிற்கும்
நீங்கள்-
ஆழக்கடலின்
அலையில் தோன்றும்
வெண்மை நுரையாய்
எங்களை விட்டு
எங்கோ செல்கின்றீர்

ஆமாம்-!
எமக்காய்பரிந்து
பணிந்து-
கோஷங்கள்...
கோரிக்கைகள்...
எழுப்புகின்ற
இந்த மண்ணின்
தலைமைகளே...
உங்களை நாம்
வெகுவாக-மிக
வெகுவாக
இனங்கண்டு கொண்டோம்

எங்களை ஏய்த்து நின்ற
உங்களது
இனிய வசந்தத்தின்
தென்றல் காற்றுக்கள்
ஓய்கின்றன..!
இனிவரும் புயலுக்காய்
எங்களுக்குள்ளே
எழுச்சியின் வித்துக்கள்
இந்த மண்ணின்
சொந்த முளைகள்
தலைமைகளாய்...
தளிர்க்கின்றன... ஆம்
தளிர்த்துக்கொண்டேயிருக்கின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமண்டலத்திலும் விடிவெள்ளிகள் புஷ்பித்து விட்டன

ஐவாத் மரைக்கார்

வானப் பெரு வெளியிலிருந்து
நாளைய விடிவுக்கு
நல்வரவு கீதம்பாடும்......
விடிவெள்ளியே!

லட்சோபலட்சம் விடிவெள்ளிகள்
இன்று
பூமண்டலத்திலும்
உதயமாகிவிட்டதை
நீ அறிவாயா?
அறிந்து கொள்...
நாளைய விடிவுக்கு
நல்வரவு கீதம்பாடும்
விடிவெள்ளியே!

மாளிகை வீட்டின்
மின்ஞெளி ஆதிக்கத்தை
அழித்து
இருளே மாளிகையாகும்படி
செய்யவும்......
கண்ணீர் மழை ஒழுகும்
ஏழைக் குடிலின்
ஓட்டைக் கூரையூடு
ஒளிக்கதிர் செலுத்தவும்...
உலைக்களத்தில்
புரட்சிப்படம்வரைய
தாரிகைக் கதிரிலே
சிவப்புமைதோய்த்து
நாளை உதித்துச்
சிரித்துவர விருக்கும்
பருதியின் எழுச்சிக்கு
சுபசோபனம் கூறிட
நீ இன்று எழுந்துள்ளாய்.

வறுமைச் சேற்றிலே
வியர்வைமணி தூவி
பாட்டாளி இயந்திரங்கள்
பயிர் வளர்க்கின்றன.
இருளினைச் சாதகமாக்கி,
விளைந்ததை யெல்லாம்
சுரண்டிக் கொழுத்திடும்
முரட்டு எலிகளைப்
பிடித்து நசுக்கிட...
பாடுபடுபவர்க்கே
பாராளும் உரிமை பெற...
நாளை எழுகின்ற
புரட்சியைத் தெரிவிக்க
நாங்கள் எழுந்துள்ளோம்.
ஏற்கனவே......
வேலிகள் கட்டி மறைத்தும்
பயனில்லை.
ஊழல் பலத்தின் முன்
எதிர்நிற்க முடியாத வேலிகள்
எலிகளுக்கு வழிவிட்டு
ஒதுங்குகின்றன.
மக்கள் சமுத்திரத்தில்
மிதக்கும்
மேடைப் படகுகளில் நின்று
சோஷலிசம் பேசும்
எமது தலைவர்கள்......
வார்த்தைப் பொறிகளை
வைத்தார்கள்.
எலிகளுடன் சேர்ந்து
பொறிகளும் போய்விட்டபோது...
பிறகென்ன......?

மக்களே களத்தில் இறங்கி
காணும் எலிகளைக்
கசக்கி எறிய
ஒளிக்கதிர் பாய்ச்சி உதவிட
வருகின்ற,
நாளைய விடிவுக்கு
நல்வரவு கீதம் பாடும்
விடிவெள்ளியே!

துப்பாக்கிகளாகி விட்ட
தொழிலாளத் தோழருக்கு
நாங்கள்
சோபனம் கூறுவதுடன்
நின்றுவிடப் போவதில்லை.

நாங்களே அவர்கள்!
அவர்களே நாங்கள்!!

நாளையப் புரட்சிக்கு
நல்வரவு கூறிடும்
பச்சை விளக்குகள் நாங்கள்.
சுரண்டும் வர்க்கத்துக்கு
நேரும் ஆபத்தைக் காட்டும்
சிவப்பு விளக்குகளும் நாங்களே!

இரவில் உலாத்தும் அரசியல் வாதிகள்

செ. செல்வரத்தினம்

அவன்
கருப்பட்டி யாவாரத்துக்கு
முதல் போடறதா
அவளுக்கு
ஆச காட்டினான்

அவள்
பூரித்துப் போனாள்
ஒரு சாமத்துக்கு
தன் உடலை
அவனுக்கு
தின்னக் கொடுத்தாள்.

அவன்
கம்பி நீட்டிய பிறகே
அவளுக்கு
விடிந்தது.

'புதுக்கவந்த மாமா
தோசா
வாங்கி வருவார்'
மகன்
கனவில் காலுதைத்தான்

'மாமாவும்
மண்ணாங்கட்டியும்
எழும்பட்டா மண்டு
விடிஞ்சிட்டுது'.

முடிவு

மாத்தளை - இராஜலிங்கம்

குடல் தெறிக்க தின்றதினால்
ஜீரணிக்க வேண்டி
செவ்வாழைப் பழம் தின்னும்
மூலதன முதலைகளே!
ஜீரணிக்க ஏதுமில்லா
மூதேவி என்று
பழிக்கப் படும் நாங்கள்
நாளை,
காரேறி வீதி வழி
பவனி வரும் உம்மை
ஜீரணிக்க துணிந்து
விட்டோம்!

நன்றி

கடந்த மாதம் யாழ்ப்பாணம், அல்வாய், கொழும்பு, திக்குவல்லை ஆகிய இடங்களில் நடைபெற்ற 'அக்னி' வெளியீட்டு விழாக்களில் கலந்துகொண்ட இலக்கிய ஆர்வலர்களுக்கும், ஆய்வுரை நிகழ்த்தியவர்களுக்கும், பிரதிகள் பெற்றவர்களுக்கும், விழாக்களை ஒழுங்கு செய்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

(ஆ-ர்)

'இருபதாம் நூற்றாண்டுத்
தமிழ்க் கவிதையில்
மார்க்சியக் கொள்கைகள்'
என்பது பற்றி
டாக்டர் பட்டத்திற்கு
ஆராய்கிறார்

செல்வி. தான்யா, M.A.

முற்போக்குக்
கவிதைத் தொகுதிகள்.
இதழ்கள்,
பிரசுரங்கள்
அனுப்பி உதவுக.
செல்வி. தான்யா, M.A.
ஆராய்ச்சி மாணவி
தமிழ்த்துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை - 5.
(தமிழ்நாடு)

என்று தோன்றும்?

ஆ. த. சித்திரவேல்

படுக்கைக்குச் சென்றால்
பலப்பல நினைவுகள்.
பசியும் பிணியும்
காதைக்கிள்ளும்
கடன்காரர் உருவம்
கண்ணில்தோன்றி
சாகஸம்புரியும்
உடன்பிறந்து
தேய்ந்துபோகும்
பருவக்குமரிகள்
பெருமூச்சொலிகள்
இடைக்கிடை எழுந்து
அலைக்கழிக்கும்
மாறி மாறி
இரவுகள் தோன்றும்.
என்வாழ்வில்
வசந்த இரவுகள்
என்று தோன்றும்?

தெருவோரச் சிறுவன்

சிங்களம்: சுனில் குணவர்த்தன

தமிழில்: **செந்தீரன்**

சின்னஞ்சிறுவனே!
சின்னஞ்சிறுவனே!
தெருவோரத்திலே
தாயின் மடியில்
முடங்கியிருந்தும்
நீ ஏன்
கண்ணீர் சிந்திக் கதறியழுகிறாய்!
வானக்குமுறலின்
உறுமலைக் கேட்டுக்
கண் விழித்தாயோ!
களிப்பைத்தந்த கனவுகளெல்லாம்
கலைந்தோடினவோ!
எதிர்காலம்
நினைவை
சுட்டதோ?
பசிநெருப்பை
தணித்துக் கொஞ்சம்
தொண்டைக் குழியினை
நனைத்துக் கொள்ள
சொட்டுப் பாலேனும்
இல்லையோ உனக்கு,
முன்னோர்கள் போற்றிச்சென்ற
சுபீட்ச நாட்டில்
நீ பிறந்துள்ளாய்
அதை நினைத்து
நீ
குதூகலித்திடுவாய்
இனியும் என்றும்
கண் கலங்காதே!

?

தில்லையடிச் செல்வன்

தொழிலாளி
நாங்கள்
எலும்பும், தோலுமாக
இருப்பதால்தான்
எங்களை இந் நாட்டின்
முதுகெலும்பு
என்கிறார்களோ?

வாரிசு

லீலாமணி

மன்னர்கள்
வாரிசு
மறையாமல் இருப்பதற்கா?
கடத்தல் காரருக்கெல்லாம்
மன்னர் பட்டம்
சூட்டுகிறார்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் எங்களுடையது

ஷெல்லிதாஸன்

நீங்கள்
கோடி உடுத்து
கோடீஸ்வரர்களாக
மாடியில் வாழ
மஞ்சத்தில் புரள
நாங்கள்
வாடி உழைத்தோம்
மாடாய் உழன்றோம்
ஆனாலும் நீங்களோ...
'பொறுத்தார் அரசாள்வார்'
என்று போதனை செய்து
காலாகாலமாக
எம்மை ஏமாற்றி வந்ததை
இன்று உணர்ந்து
உங்கள் வர்க்க போதனைகளைத்
தூக்கி எறிந்து
பொங்கி எழுந்துவிட்டோம்
நிச்சயம் — நாளைய உலகை
நாங்கள் அரசாள்வோம்!

மாற்றங்கள்

லோகேந்திரலிங்கம்

எங்கள் சந்தாக்கள்
சேர்ந்து உயர்ந்ததனால்
சங்கத்தின் கட்டடமும்
கம்பீரத் தோற்றமுடன்
பத்து அடுக்குகளும்
பல நூறு அறைகளுடன்
செத்து மடியுமெங்கள்
சொத்தாக திகழ்கின்றது
இங்கு...
எங்கள் உழைப்பேதான்
உயர்வாகத் திகழ்கின்றது.
அதனுள்ளே...
உழைத்தும் பழகாத
ஒரு கூட்டம் இருந்து
மின் விசிறி கீழே
'மந்திரங்கள்' ஓதுகின்றார்
அத்தோடு...
எங்கள் உழைப்பதனை
சுரண்டுகின்ற எசமானும்
தம்முடைய ''பக்தி''யினை
தம்பட்டம் அடித்திடவே
கல்லான இறைவனுக்கு
கருங்கல்லால் மண்டபமும்
தங்கத்தகடுகளை
தரைமீதும் பதித்து
அலங்கார ஓவியங்கள்
அகமெல்லாம் நிறைகின்றன.
இங்கும்...
எங்கள் உழைப்பேதான்
'உயர்வாக' திகழ்கின்றது:
ஆனால்...
எங்கள் குடிசைகளின்
கூரை வழியாக
கொட்டுகின்ற நீர் நிரம்பி
குழந்தைகளை மூழ்கடிக்கும்
ஆதலினால்...
எங்கள் உழைப்பெல்லாம்
'உயர்ந்து' நிற்கின்ற...
எங்கள் சொத்தாக
எழுந்து நிற்கின்ற...
கோயில் மண்டபமும்
சங்கத்தின் கட்டடமும்
உறைவிடமாய் எங்களுக்கு
உதவுகின்ற காலமதை
திரண்டெழுந்து அமைத்துவிட
தயாராக இருக்கின்றோம்.

பருவம்

வதிரி. சி. ரவீந்திரன்

சின்னப்பருவத்தில்
சிறுமணலில் வீடு
கட்டிய — நான்
இன்று
வெட்டைவெளியிலே
கல்லுச் சுமந்து
கட்டடம் எழுப்புகிறேன்.

குருதிப் பயணங்கள்!

மு. பஷீர்

அடக்கு முறை
ஆதிக்க வெறி
சுரண்டற் கும்பல்
களையப் புறப்பட்ட
போராளிகள்
தூக்கிப் பிடித்த
கொடிகள்!
துப்பாக்கி
சவைகளை
குளிப்பாட்டிய
வண்ணங்கள்

மழலைப் படிகடந்து
பருவமேடேறும்
பெண்மைப் பயணத்தில்
சிந்திய துளிகள்

வாழ்கை துவங்கிய
ஒரு நள்ளிரவில்
மெல்லிய முனகலில்
பளிச்சிட்ட மின்னலாய்
கோடிட்ட
புள்ளிகள்

ஒரு மனிதப் பிஞ்சினை
உலகிற் கீந்து
தாய்மைப் பல்லக்கில்
சுகித்த போது
பெருக் கெடுத்த
அருவி வெள்ளம்

ரோஜாவில் சிரித்து
அந்திவானில் உறங்கி
கனிகளில் சுளித்து
சுடலையில் அக்னிக்
காங்காய்
சினந்தபோது

ஆண்டுப் பரிணாமத்தின்
ஐந்தாம் மாதத்தில்
வர்க்கப் பிரளயத்தின்
ஆத்மகோஷங்கள்
உலகை உலுப்பியபோது
கண்ணுக்கெட்டிய
தூரம் வரை
தெரிந்ததெல்லாம்,
சிவப்பு!

குருக்கத்திப் பூக்கள்

பண்ணாமத்துக்கவிராயர்

சீழ்வடிக்கும் வக்கிரங்களை
சிருஷ்டித்துவிட்டு,
சீவன் பிரிந்தவுடன் —
பூர்ஷுவாக்களின்
புத்தக அலுமாரிக்குள்
புதைந்துகொண்டு தூங்கப்
பாட்டெழுதும்
பாண்டித்தியம்
எனக்குவேண்டாம்.

படிப்பறியாப் பாட்டாளியின்
பாமர மனதில்
புனிதமான அவன்
இதயத்தாமரையில்
ரீங்காரம் செய்யும்
கவிவண்டாய்
வாழ்வதே
பரமபதம் எனக்கு!

முதலாளித்துவத்துக்கு
முதுகுசொரியும் பேனா
முனையொடிந்து
சீண்டுவாரற்றுக்
குப்பையிலே
சீ...யென்று
எறியப்படும் நாளில் —

குருக்கத்திப் பூக்களாய்
குலுங்கிச் சிரிப்பேன்
நான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதியதொரு வீடு

அன்புடீன்

எந்தையின் தந்தையின்
காலத்தில் கட்டப்பட்ட
அந்த வீடு
இப்போது ஓட்டையாகி
ஒடிசலாகி...
'பூச்'செல்லாம் சிதைந்து
வெள்ளையெல்லாம் தேய்ந்து
பாழ்பட்டு விட்டது

எந்தையின் தந்தையின்
ஞாபகார்த்தமான அந்தவீடு
இன்னும் இன்னும்
நிலைபெற்றிருக்க வேண்டுமென
எந்தை
அந்த வீட்டிற்கு
கூரை வேய்ந்து
'பூச்சுப்' பூசி
பாதுகாத்து வந்ததாய்
அம்மாவும்
அம்மாவின் சகோதரர்களும்
கதை சொல்வர்

ஓட்டையாகி...
ஒடிசலாகி....
சுவர்களெல்லாம்
ஆட்டம் கண்டுவிட்ட
அந்த வீட்டை
அப்பர் போல்
மேலும் மேலும்
'றிப்பயர்' செய்து
சீவிக்கவோ...
சந்ததியைச்
சீவிக்க விடவோ
எனக்கு விருப்பமில்லை

நானும்
எனது சகோதரர்களும்
நண்பர்களுமாய் இணைந்து
பிக்காசு சுத்தியல்...
இத்தனையின் துணையுடன்
அப்பாவின் அப்பாவால்
கட்டப்பட்ட அந்தவீட்டை
முற்றாக உடைத்து...
ஆட்டம் காணாத
அத்திவாரத்தில்
புதிய வீடொன்றை
கட்டி எழுப்ப
முடிவெடுத் துள்ளோம்
புதிய கொத்தர்களால்
சிருஷ்டிக்கப்பட விருக்கும்
எங்கள் புதுமனையின்
புகு விழா
மிகவிரைவில் நடைபெறும்!

தரவுகள்

சரவணையூர் சுகந்தன்

எங்கள் தேற்றம்
உங்களுக்குத் தெரியும்
எங்கள் கணக்கு
ஏன் புரியவில்லை
இதோ
கணக்குப் பார்க்க
தரவுகள் தருகிறோம்
விரைந்து பாருங்கள்
விடைவரும்

காலம்

பூவரசி

அன்றுபெண்ணிற்கு
வயதானால்
கையில் ஜாதகமுடன்
காலமெலாம் அலைந்திடுவார்
தந்தை; வரனுக்காக!
இன்று
தன்மகளின் தராதரப்
பத்திரத்துடன்
பல படிகள் ஏறுகிறார்
ஏக்கமுடன் — வேலைக்காக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபக்

என். சண்முகலிங்கன்

''என்ரை அம்மா! நொக்கு
எனென்ன வேணும்''
அன்றுன்மடியில்
மழலை நான் கேட்டேன்.
''குஞ்சு, நீ வண்ணக்
குயிலாய் இசைபாடு!
நெஞ்சு மகிழும் உன்
நிலவிசையில்நான் வாழ்வேன்''
அன்னையுன் அன்பிலே
அழகாய் வளர்ந்தேன்
மழலைக் கனவின்
மனச் சிறகடித்து
மகிழ்ச்சிப் பெருக்குடன்
மோகனம்பாடினேன்
அந்தோ, அம்மா!
சத்தம் இல்லையே!
சத்தம் இல்லாச் சங்கீதராகமா
இல்லை...அம்மா!
பசிராகத்தின்
பலமான ஒலிகளால்
எங்கள் காதுகள்தான்
அடைத்தன அம்மா!
எங்களுக்கு ஏன் பசி...
எங்கள் உழைப்பெங்கே....
எங்கள் உணவெங்கே...
அதோ...! அதோ
அவர்களைப்பாருங்கள்
எங்கள் உணவை உண்டு உண்டு...
எங்கள் உழைப்பை
உண்டு உண்டு...
எங்கள் இசையில்
மகிழந்து மயங்கி...
ஐயோ! அம்மா! சத்தம்
இல்லையே.....
எங்கள் இனிமையை
தின்பவர்க்காக
இனியும் இன்னிசை
பாட நான்மாட்டேன்
'தீபக்' ராகம்
பாடத்துணிந்தேன்
தீபக் ராகம்......தீபக் ராகம்......
ராகத் தீயிலே......
நானும் வேகலாம்......
அம்மா எனக்காய் நீ
அழவேண்டாம்
நாளையுலகின்
நல்வாழ்விற்காய்
தீயரை அழிக்க
தீபக் ராகம்......
நெஞ்சுமகிழ
மேகமல்ஹார்,
வருங்காலத்தில்
வந்திடும்அம்மா
அப்பொழுது உன் மகன்
இருப்பேனோ! இல்லையோ!
என்னுடைய ராகமும்
பொன்னுலகின் தீபமும்
என்றென்றும் நிலை நிற்கும்
என்புகழில் நீ வாழ்வாய்!

சிவப்பு

நெல்லை நடேஸ்

மலையக மாந்தரை
சுரண்டிச் சுகித்திடும்
துரைமார்களே?
நீங்கள்
ஆபாசம் போக்க
மகிழ்ந்து குடித்திடும்
தேநீரின் சிவப்பு
நாளை
உங்கள் வாழ்வை முடித்திடும்
பாட்டாளிகளின்
கொதிக்கும் உதிரத்தின்
சிவப்பே.

வார்ப்புகள்

காந்தி

பத்தொன்பதாம் நூற்றாண்டில்,
பிறந்து வளர்ந்த காந்திக்கு
இருபதாம் நூற்றாண்டின்
முற்பகுதியில்
மகாத்மா என்று பேர்!
மகாத்மா என்றால்,
பாரதமே எழுச்சியுறும்.

இருபதாம் நூற்றாண்டின்
பிற்பகுதியில்
''மகாத்மாகாந்தி'' என்ற
பெயர் கூறி,
சில பேர் வாழ்கின்றார்,
காந்தியை,
கண்ணாடியில் அடைத்து,
சுவரில் மாட்டுகின்றார்.
பத்தொன்பதாம் நூற்றாண்டில்
பிறந்து வளர்ந்த காந்திக்கும்,
இருபதாம் நூற்றாண்டின்,
அகிம்சை வாதிகாந்திக்கும்,
வருகின்ற நூற்றாண்டில்,
சுவரில் கூட இடம் இருக்குமா?!

லெனின்

வறுமையுற்ற மக்களுக்கு,
வாழ வழி வகுத்து,
அக்டோபர் புரட்சியினை
ஆக்ரோசமாய் நடத்திவிட்ட,
மா மனிதன் லெனின்;
இன்று இல்லை!
ஆனால்,
லெனினுக்கு சிலை செய்கின்றார்.
இன்னும்,
லெனின் புகழ் பாடுகின்றார்.
வறுமை யுற்ற மக்களுக்கு,
வாழ வழி காட்டாராம்!
லெனின் பெயரைச் சொல்லி
தம் வாழ்வை உயர்த்துகின்றார்!
லெனினை
கண்ணாடியில் அடைத்து,
சுவரில் தூக்குகின்றார்.
சிந்தையிலே,
சுரண்டலை,
சிந்திக்க மறுப்பதில்லை!
ஐயோ! லெனினே!
உன் பெயர் கூறி,
சிலர் வாழ்கின்றார்;
பலர் வாடுகின்றார்.
என்றாலும்,
சமான்ய மக்கள்,
உன் பெயரை
நினைவு கூர்வார்கள்!

மா-சே-துங்

வேளாண்மை இடையே,
களைபயிர் வளர்வது,
வேளாண்மைக்கு தீங்கு.
அது போல்,
மனிதப் பயிரிடையே,
மனிதக்களை வாழ்வது
மனிதர்க்கு தீங்கு.
மனிதரை சுரண்டுகின்ற,
மனித உருக் கொண்ட,
மனிதக் கொடியோரை,
கலாச்சார புரட்சி கொண்டு,
கலக்கிய மாசேதுங்,
வாழட்டும்! நீடுழி வாழட்டும்!!

ஏழைக் கவி வாழ்த்துவதால்,
அவர் மட்டும் வாழ்வதில்லை!
என்றோ ஒரு நாள்,
மனிதராய் பிறந்தவர்
மாநிலத்தில் மடித்திடுவார்!
மனிதனாய் பிறந்தவன்,
மரணத்தை நோக்கி செல்கின்றான்.
என்பதனால்,
மாசேதுங்கும் ஒரு நாள்
மாநிலத்தில் மடிந்திடுவார்.
அவர் மடிந்து விட்டால்,
சிலர் மகிழ்வார்கள்.
ஆனால்,
மனிதப் பண்பு கொண்ட;
பல மனிதர் அவரை
வாழட்டும் என்றே
வாழ்த்திடுவார்!

இராஜ தர்மராஜா

ஆபிரிக்கா

ஆபிரிக்கா என்
ஆபிரிக்கா.
எம்முதியப்
புல்வெளி ஈன்ற
படைக்கள
வீரரைத் தந்தவளே.
எங்கோ தொலைவில்
ஆற்றின் அருகிருந்து
என்பாட்டி
பாட்டிசைக்கும்
ஆபிரிக்கா.
உன்னை நான் முந்தி
ஒருபோதும் அறியேன்.
எனினும் உன்குருதி
என் நாள வழிபாயும்.
கருமையாம் உன்குருதி
வயலெல்லாம்
வளம்பாய்ச்சும்.
அக்குருதி உன்வேர்வை
பெற்ற குருதி.
அவ்வேர்வை உள்வேலை
பெற்ற வேர்வை.
அவ்வேலை உன் அடிமைநிலை
தந்தவேலை.
உன் பிள்ளைகள் சேர்ந்த
அடிமை நிலை.
ஆபிரிக்கா நீ சொல்வாய்
ஆபிரிக்கா

ஆங்கிலத்தில்;

- டேவிட் டியொப்

இந்தக் கூனல்முதுகு
உன் முதுகோ?
அவமானச் சுமையில்
ஒடிந்த இந்த முதுகு
நடுப்பகல் வெயிலில்
கொடுஞ்சவுக்குக்கு
ஓம் என்னும்
இம்முதுகு.
என்றாலும் அடங்கி
அமைந்த குரல் ஒன்று
பதில் சொல்லும்.
செருக்குடைய
என் மகனே
அதோ பார்
அந்த அற்புத - வாடிய
வெள்ளை மலர்கள் நடுவே
தனிமையில் நிமிர்ந்து நிற்கும்

மொழி-வளவன்

அதுவே ஆபிரிக்கா,
உன் ஆபிரிக்கா
பொறுமையுடன் விடாப்பிடியாய்
மீள அது வளரும்.
படிப்படியாய் அதன் பழமும்
விடுதலையில்
துவர்ச்சுவையைத்
தானடையும்.

பலவீனம்

எஸ். ஐ. எம். ஹம்ஸா

தீக்கோழிகள் தலையை
மண்ணில்
புதைப்பதாக நினைந்து
தூரத்தில் நிற்கும்
வான் கோழிகள்
அவற்றின்
தலையை முழுகப்
பார்க்கின்றன
ஆனால் —
பக்கத்தில் வந்ததும்
பலவீனச்
சிறகை விரிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருங்காலத்தவர்க்கு

நான் வாழ்யுகம்
இருளாம் யுகம்.
சூதில்லாச் சொல்!
அப்படியும் ஒன்றுண்டோ!
சுருங்காத நெற்றி என்றால்
கருங்கல்லாம் நெஞ்சம்
சிரிப்பவன் யார்?
கொல்வறுமைப்
புதினம் தெரியாத மடையன்!

இதென்ன காலமிது!
முசுப்பாத்தி நீ கதைத்தால்
கொடுமை கண்டு
வேகாத பாவம் அது.
அமைதிபெற
தெருவுலாவும் தோழன் யார்?
துன்பத்தில்
உழலும் நண்பர்
அணுகாத துலையிலுள்ள
ஒருவனல்லோ.

நான் வாழ நான்
உழைப்பதுண்மை
ஆனால் அது ஒரு
தற்செயலே.
எப்படித்தான்
நானுண்பேன்?
என்செய்கை
எதுதானும்
வயிறார நான் உண்ணத்
தகுதிதரும்
வகையுடைத்தோ?
பசித்தவர் கைபறித்த
உணவல்லவா நானுண்பது?
விடாய் எடுத்தார் கைமுடக்கி
எடுத்த நீரல்லவா நான் குடிப்பது.

ஞானியாக
வாழலாம் நான்.
பழம் நூல்கள்
சொல் ஞானம்:
உலக வினையை
மறந்துவிடு.
சிலநாளுக்கு
நல்லாய் வாழ்.
அச்சம் தவிர்;
அகிம்சை கடைப்பிடி.
தீமைக்குப்பதில்
நன்மை செய்.
ஆசையைத் துறத்தலினும்
அறுத்தல்திறம்.
இவை எனக்கு இயலா.

பசி அரசாண்டு
குழப்பம்மலி
காலத்தில்
நகர்ப்பக்கம்
நான் வந்தேன்.
மனிதரெல்லாம்
கிளர்ந்தெழுந்த காலத்தில்
நான் சோர்ந்து
உளங்கொடுத்தேன். அதோடு
புவியில் எனக்களந்த
நாட்கணமும்
பறந்தோடிப் போயினதே.

என்நாளில் தெருக்கள்எனை
மண்சரிவிற் கொண்டுவிடும்.
பேச்சென்றால் கழுத்திறுக்கக்
கயிறுவிடும்.
என்செயலால் ஆவதென்ன?
ஒன்றுமில்லை.
நானில்லையென்றாலோ
அரசுடைமை காப்புறுதி

இது என் கனவு,
புவியளந்த என் வாழ்வும்
புரண்டழிந்து போயினதே.

மனிதனது மனப்பலமோ
மிக அற்பம்.
குறிக்கோளோ விரிந்தவெளி
நெடுந்தொலையில்.
கிடைப்பதற்கு அரிதாய்
அது போக
கண்ணுக்கு மிகக் கிட்டடியால்
அது தோன்றும்.
புவிமீது எனக்களந்த
வாழ்வுமோ சாம்பியதே.

நாம் அமிழும்
வெள்ளத்தில்
நீங்களெல்லாம் ஒருவேளை
கிளர்ந்தெழலாம்.
ஆனால் ஒன்று
மறக்கவேண்டாம்.

செருப்பை நாம்
மாற்றுகின்ற தடவைகளில்
மேலாக
நாட்டையல்லோ
மாற்றிவந்தோம்.
காலமெல்லாம் போராட்டம்
என்பதின்றி
அதையெண்ணி வந்தோம்
சொல்லி வந்தோம்
கொடுமை கொடுமை என்றோம்
அவ்வளவுதான்.

ஒன்றுமட்டும் உறுதியாக
நாமறிவோம்
பாழ்நிலையை எண்ணிவிட்டால்
புருவமெல்லாம்
பொறிபறக்கும் அநீதிகண்டு
எழுகின்ற கோபமும்
குரல் ஒலியில் இடிதெறிக்கும்
என்ன செய்வோம்
கருணையெனும் அடித்தளத்தை

பேட்ரெல் பிறிச்ற்

எங்களது பலவீனம்
பற்றி நீர் பேசுகின்ற
பொழுதெல்லாம்
அவற்றை எமக்குக்கொண்டுவந்த
இருட்காலம் பற்றியும் நீர்
சிந்திக்க.

மொழி-வளவன்

ஏனென்றால் நாட்டை எண்ணி
நாம் கவலை
கொள்வதெல்லாம்
வர்க்கமுறைப் போராட்டத்திலும்

மண்மீது நிலைநிறுத்த
எண்ணிய நாங்களுமே
சிறுகருணை எம்மனத்தில்
இருத்த இயலாது
அழிந்துவிட்டோம்

ஒன்று சொல்வேன்.

மனிதனுக்கு மனிதன்
துணை செய்யும்நாள்
வரும்வரைக்கும்
எம்செயலைக்
கடினமாய்
ஆராயவேண்டாம் ஐயா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதியோம்!

ஈழத்து நூன்

உலகிற்கே அறிவியல்
தந்தவர்கள் நாங்கள்
என்கின்ற இறுமாப்பு
இருக்கட்டும், நிஜ உலகிற்கு
வாருங்கள்!
குடும்பச்சண்டை, திருட்டு, நோய்
தொழிலின்மை
குமர்க் கரையேற்றம்
இத்தியாதி பிரச்சினைகள்
யாருக்குத்தான் இல்லை!
மைவெளிச்சக் காரனின்
உண்டியல்கள் நிரப்புவோரே
எமது தலைவிதியை நிர்ணயிக்க
அவன் என்ன ஆண்டவனு?
வாழ்க்கை யென்றிருந்தால்
வறுமை, நோய் இயற்கைதானே
உழைக்காமல் வாழும்
சுரண்டல் ஓநாய்களின்
பித்தலாட்டங்களால்
நாம் இன்னும் நலிகின்ருேம்
எம்மைத் தொட்ட சீர்கேட்டுக்கு
காரணம் நம் தலை விதி.
சிந்தனைத் தெளிவின்மையே
எங்கோ இருந்து வரும்
அண்டப் புளுகர்கள் எம்மைச்
சுரண்டி வாழ நாம் இனியும்
அனுமதியோம்!

எழுக!

க. ஐ. யோகராஜா

புல்லிடுக்குப் பனிகளாய்
கிடந்து வரும் - எம்
நவயுகத் தோழர்காள்!!
எழுக...!
நாம் எல்லோரும்
புரட்சிப் புது -
பெரு வெள்ளமாய்;
ஒன்று சேர்ந்து.
சுரண்டல்கள்
முதலாளித்துவத் தன்மைகள்
அனைத்தையும்...
ஒரு நொடியில்
சுட்டுத் தள்ளிட
நம்! கரங்களில்
வலு வேற்றி
வருக...!! எழுக!!

புறப்பாடு

பாலமுனை பாறூக்

உழைத்து, உழைத்து...
இழந்து... இழந்து...,
இழக்க எதுவும்
இல்லா நிலையில்
எழுந்து...
பிரபஞ்ச மெல்லாம்
அக்னி மலர்களாய்ச்
சிவக்க முனைகையில்...
உங்கள் — —
ஏகாதி பத்திய
முதலாளித்துவ.., நிலப்பிரபுத்துவ
எதேச் சாதி காரச்
சுரண்டற் கரங்களால்
அதனை —
மூடி மறைக்கவா முயல்கிறீர்?
இருளின் போர்வை
எடுத்து...
போர்த்தவா முனைகிறீர்...?
இருண்ட வானம்
இடியாய் இடிக்கும்! முழங்கும்!!
நாங்கள் —
இடியாய் இடிப்போம்...
வெடிப்போம்! பறிப்போம்!!
இது...
அடக்க, அடக்க
தொடரும், தொடரும்!!

FREE VERSE

புதுக் கவிதை

புதுக்கவிதைகள் ஈழத்திலும் - தமிழகத்திலும் ஒரு விஸ்தாரமான களத்தைப் பெற்று கம்பீரமாக வளர்ந்து வருகின்றது.

இது பற்றிய மயக்க நிலை இன்னும் பலருக்கு ஒரு தெளிவு படாத போதிலும் FREE VERSE 'ஃபிரி வேர்ஸ்' என்பதே வசன கவிதை என்றும், இதுவே 'புதுக்கவிதை' என்றும் சிலர் கூறி வருகின்றனர்.

19ம் நூற்றுண்டின் பிற்பகுதியில் ஆங்கிலக் கவிதை உலகில் எழுந்த கவி மாற்றத்திற்கு ஃபிரி வேர்ஸ் என்ற பெயர் சூட்டப்பட்டது. இந்த நி. மான புதுக் கவிதை முயற்சியில் சோதனை செய்தவர்களின் நோக்கம் ஆங்கில மரபுக் கவிதையின் சந்த சம்பிரதாயங்களை மீறுவதும், கவிதைத் தன்மைக்கு ஒரு சுயேச்சைத் தன்மையைக் கொடுப்பதும், .. வீனத்துவத்தை அரவணைத்துக் கொள்வதுமாகும்.

இன்றைய ஃபிரி வேர்ஸ் கவிதைதைகளில் முக்கிய சில பண்புகளைக் காணலாம். குறிப்பாக குறல் ..ராக்கம், ஒலி மாற்றம், இடையிடையே கருத்து முற்றுப்பெறல், .. யவற்றுடன் ஒரு கனமான வ.. ம் இக் கவிதைகளில் சிறப்பாக அமைந்து வருகின்றது. கற்பனைப் படிமங்கள் பல கவிதைகளையே ஆட் கொண்டும் விடுகின்றன.

சென்ற நூற்றுண்டில் இக்கவிதைத் துறையின் சோதனைக் காரர்களாக வால்ட்விட்மன், எமிலி டிக்கன்ஸன் ஆகியோரையே குறிப்பிடுவர். ஆனல் இவர்களின் புதுக் கவிதை முயற்சிகள் சமகாலத்துக் கவிஞர்களால் பின்பற்றப்படவில்லை. காலப்போக்கில் இதன் வளர்ச்சி பலதை ஈந்த பொழுது புதுக்கவிதைத் துறையில் ஒரு வேகம் ஏற்பட்டது. சம்பிரதாயமான கவிஉருவ மாற்றங்களில் இருந்து விடுபட்டு, ஒரு புதிய வார்ப்புக்குள் அடங்கி வருவதால் புதுக்கவிதைகள் பார்வையிலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. இந்த நூற்றுண்டில் கவிதைத் துறையில் இப் புதுக்கவிதைகள் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி விட்டன என்று கூறலாம். தமிழைப் பொறுத்த மட்டில் பல ஆண்டுகளாக இக்கவிதைக்குப் பெயர் சூட்டுவதிலே பெரும் சர்ச்சைகள் ஏற்பட்டு இன்றும் சரியான தீர்வு காணப்படாமல் இருக்கின்றது.

இச் சர்ச்சைகளுக்கு மிக முக்கியமானது ''ஃபிரிவேர்ஸ்'' தான் என்பதே உண்மையாகும். ஃபிரிவேர்ஸ் என்ற இந்த ஆங்கிலவார்த்தை 'வேர்ஸ் லிப்ரே' என்ற பிரஞ்சு வார்த்தையின் சமமான மொழி பெயர்ப்பு என்றும் கூறுவர். ஆனல் இவ்வார்த்தையையே வசனகவிதை என்று தமிழில் அழைக்கும்போது பல பிரச்சினைகளை இது உருவாக்கி விடுகின்றது.

பொதுவாக, ஃபிரிவேர்ஸ் என்ற சொல்லின் சரியான அர்த்த புஸ்டியான தமிழாக்கம் 'வசன கவிதை' அல்ல என்று கூறலாம். 'புரொஸ் பொயம்' (Prose Poem) என்ற சொல்லே 'வசனகவிதை' எனல் பொருந்தும் ஆகவே, ஃபிரிவேர்ஸ் என்ற சொல்லின் தமிழாக்கம் வசன கவிதை அல்ல.

இவ்வாருன பெயர்ப் பிரச்சினைகளை விடுத்து பொதுவாக இன்று வழங்கப்படும் ''புதுக்கவிதை'' என்ற சொல்லே இப்படைப்பை இனங்காட்டுவதற்குப் போதுமானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துருவல்

மதிப்புரை
பகுதி

கடுகு

சாந்தன்

சாந்தனின் பரிட்சார்த்த முயற்சியின் முதல் வெளியீடான 'கடுகு' குறுங்கதைத் தொகுதி இருபத்தியைந்து குறுங்கதைகளைக்கொண்டு அளவில் கடுகாகவும் வெளிவந்துள்ளது. ஈழத்து நிலை, நினைப்புக்களைப் பொறுத்தவரை பரீட்சார்த்தமானவற்றை வரவேற்கின்ற அல்லது விலத்துகின்ற பாங்குகளை கங்கணம் கட்டிக்காட்டுவதை விட சாந்தனின் முயற்ச்சி எந்தநிலைப்பாட்டுக்குப் பரீட்சார்த்தமாக அமைகின்றது என்பதை அளவிட்டுப்பார்க்கவேண்டியது அவசியமாகின்றது.

இலக்கிய 'இலக்கணக் கட்டுமானங்களைப் பிரித்துக்கொண்டு உருவகப்பரீட்ஷையம் செய்ய முனைந்தமைக்கு சாந்தனைப் பாராட்டவேண்டிய அதேவேளை உள்ளளவு கனப்பரிமாணங்களைப் புதிய பரீட்சையம்செய்யவோ புதுமைப்படுத்திக் கொள்ளவோ சாந்தன் முயலவில்லை என்பதனைவாசகர்கள் படித்து உணருவர்.

சாந்தனின் இருபத்தியைந்து குறுங்கதைகளிலும் சமுதாயத்தின் வீதமற்றபிரச்சினைகள் துணுக்குகளாகக் காட்டப்படுகின்றன. இந்த வீத மற்ற பிரச்சினைகள் எல்லாமே பூரணத்துவமில்லாத பொருளாதாரப் பலவீனமான சமுதாயத்தின் அனுங்கல் பிரச்சினைகள் என்பதை சாந்தன் உணர்ந்துகொள்ளவில்லை. இது சமுதாயப் பிரச்சினைகளிலிருந்து தொலை நிறுத்திக் காட்டுகின்றதாகவே சொல்லவேண்டும். ஒருவன் பார்வையாளனாக இருப்பதற்கும் பங்கெடுப்பதற்கும் வித்தியாசம் உண்டு. பார்வையாளனாக நின்றுபுரியாத நனையாத அனுபவங்களைப் படம் பிடித்துக்காட்ட முடியாது என்பதற்கு இத்தொகுதியிலுள்ள பல குறுங்கதைகள் உதாரணப் பட்டு நிற்கின்றன.

வசதி, சலுகை, முழும், கட்டுப்பாடு, அறியாமல் எப்படி உறவுகள். பிச்சம் போன்ற கதைகளினால் தேசியத்துவத்துக்கு முக்கியம்கொடுக்கப்பார்க்கின்றாரா? அல்லது தமிழுக்கு முக்கியம் கொடுக்கப் பார்கின்றாரா? என்பதைக் கண்டு பிடிப்பது கடும் முயற்சியாக இருக்கின்றது. தேசியத்துவத்துக்கு முக்கியம் கொடுக்க நினைத்து எழுதியிருந்தால் அது அவற்றின் தெளிவின்மையைக்காட்டுகின்றதென்றே சொல்ல வேண்டும். ஏனெனில், தேசியத்துவமும் இல்லாமல், மொழிவாதமும் இல்லாமல் இடை நடுவில் அவர் நினைப்பு நிற்கின்றது. 'சலுகை' கதையில் இதை தெளிவாக உணர முடிகின்றது.

'கடுகு' க்கு முன்னுரை எழுதிய எஸ். பொ. ''சிலவற்றில் மிக நுணுக்கமாக இசைக்கப்பட்டுள்ள கனதியான சமுதாயப்பார்வையின் கோலங்களைக் காணுவதற்கு சாமானியனுக்குப் பல நாள் ஆகலாம்''

திருமலை நவம்

என்று சுட்டுகின்றார். இங்கு சாந்தன் கையாண்டது கனதியான பிரச்சினைகளாகஇருந்தாலும் அதைச்சாமானியன்தான் படித்தாகவேண்டும். அவன் படிக்கிற மாத்திரத்தே உணர்ந்து கொள்ளவும் வேண்டும். ஏனெனில் சாமானியனின்பிரச்சினைகளை ஆய்வுக்கு உட்படுத்தி உருக்கொடுத்து விட்டு அவனையே சிக்கல்படுத்துவதா?

பிரச்சினைகளை நக்கல் நயங்களாகப் பார்த்து அதில் சத்தியவேட்கையைக் காண்பதை விட முன்னுக்குநுரை கக்கும்பிரச்சினைகளை மானுஷ்யகத்தால்உணர்ந்து அணுகி அவலப் பாடுகளைக் கருவாக்கி முடிவுப்படுத்துவது உயர்ந்த சமுதாயப்படப்பிடிப்பாக இருக்குமென்று நான் நினைக்கின்றேன்.

'கடுகு' இன்றைய ஈழத்து சமூகம் பற்றிய ஒரு தீவிரமான விமர்சனம் என்று புரிக்கோடு இடப்பட்டுள்ளது இன்றைய ஈழத்தின்சமுதாயத்தைப் படம் பிடித்துக்காட்ட முயன்ற சாந்தனுக்கு கனமான தீவிரமானவற்றை இனங்கண்டுகொள்ள முடியாமல் போனது ஒரு குறைபாடாகவே எனக்குப்படுகிறது. இனங்காண்பதற்கு சரியான தத்துவ, அரசியல் பரிவுகள்வேண்டும். ஏனெனில் மொழிப் பிரச்சினையும், இரண்டு உண்மைகளைக் கண்டுபிடித்தமையும், பப்பாசிக்களவும், அந்தஸ்து ஆய்வு முறையுந்தான் இந்த நாட்டுச் சமுதாயத்தின் முன்னணிப் பிரச்சினைகளா? இவையே சாந்தனை சமுதாயத்திலிருந்து எவ்வளவு தூரம் விலத்திக்காட்டுகின்றது என்பதைப் புரியவைக்கிறது. இருந்தும் தனது படப்பிடிப்பில் பேயர்'பொடியன்'அவதி. முதலாளிகள் பலவிதம், போன்ற கதைமூலம் ஓரளவு உண்மைப்படுத்துகின்றார் என்பதற்காக பாராட்டவேண்டியுள்ளது.

ஒருவன் எழுத்தாளனாக இருப்பதற்கும் கம்யூனிஸ்ட்டாக இருப்பதற்கும் அடிப்படையே மனிதனாக இருப்பது என்று வரைவிலக்கணப் படுத்தியுள்ளார். மனிதனாக வாழ வைப்பதற்கே கம்யூனிஸம் பிறந்தது என்பதை உணர்ந்துகொண்டு அணுகி உருக்கொடுத்தார் என்றால் அதுவே சிறப்புள்ளதாகும்.

வரப்பெற்றோம்

காந்தீயம்
(திங்கள் வெளியீடு)
விலை சதம் 10
உருத்திரபுரம்
(இலங்கை)

பொன் மடல்
(விலையில்லாக்கவிமடல்)
ஆசிரியர் - தில்லையடிச்செல்வன்
92, மன்னார் வீதி,
புத்தளம்.

மலர் விழி
(திங்கள்வெளியீடு)
விலை சதம் 65
193, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

O பிறநாட்டுக் கவிஞர்கள் 1

மக்கள் கவிஞன் மாயகோவ்ஸ்கி

''நாங்கள் எங்கள்காலத்துமுகம்; எங்கள் சொற்கலையில் இக்காலத்து சங்கநாதம் ஒலிக்கின்றது. சென்றகாலம் அமுக்க காலம். புஸ்கின், டொஸ்தியோவ்ஸ்கி, டொல்ஸ்தோய் ஆகியோரைப் புதுமைப்படகில் நின்றும் தூக்கி எறிக. கவிஞர்களுக்கு உரிய மரியாதையை நாம் வேண்டுகின்றோம்'' என்று இரசிய நாட்டுப் புரட்சிக் கவிஞர் மாயகோவ்ஸ்கியும், அவரது நண்பர்களும் சேர்ந்து விடுத்த ஒரு விளம்பி பிரகடனத்தில் கூறியுள்ளனர்.

''பொதுமக்கள் அவையின் முகத்தில் ஓர் அடி'' எனப் பெயர் சூட்டப்பெற்ற இவ்விளம்பியின் மூலம் இவர்கள் விரித்த தத்துவத்திற்கு எதிர்வுவாதம் என்னும் பெயர் கொடுக்கலாம். 1912-ஆம் ஆண்டு வெளிவந்த இந்த எதிர்புவாதம் என்பதன் உட்பொருளைப் பார்க்கும் பொழுது 'எதிர்காலத்தை நம்பிக்கையுடன் எதிர்பார்த்துப் பழைய மரபுகளை எல்லாம் எதிர்த்து வேரறுப்பது' என்பது இதன் கோட்பாடு எனத் தெரிகின்றது. குறிப்பாகச் சொல்வதாயின், 'எங்கள் சொற்கோப்பை விரித்து, எதேச்சையாக இயற்றிய சொற்களைச் சேர்த்தல்' இதுவரை பயின்றுவந்த மொழியில் மாறாத வெறுப்புக்கொள்ளல்', 'இதுவரை பெற்ற போலிப் புகழைக் கிழித்தெறிதல்' என்ற கருத்துக்களை இவர்கள் பகிரங்கப் படுத்தியுள்ளனர்.

இவர்கள் பிரகடனம் பழையதை அழித்துப் புதியதை விதிக்கின்றது. பழைய காகலை, மாதரைப்பாடும் கற்பனைக் கருவூலங்களை எள்ளி நகையாடுகின்றது. புதிய விஞ்ஞானத் துறைகளைப் போற்றுகின்றது.

மாயகோவ்ஸ்கி எதிர்வவாதத்தில் மிக நம்பிக்கை வைத்திருந்தார். பழையதை நீக்கிப் புதிய உலகு சமைக்க அவர் விழைந்தார். பாட்டாளி மக்களில் உண்மையானபற்றுக் கொண்டவராய் இருந்தார்.

இ. இ.

புரட்சியை அவர் போற்றினர். சமதர்மம் உலகைச் சிக்கலைக் குறைத்து ஒன்றாக்கும் என்று எண்ணினர்.

மக்களைப் பற்றிய காட்சியே அவர்பாடலுக்கு உணர்வளித்தது. பா என்றால் என்ன என்பதைப் பற்றி அவர் தமக்கே உரித்தான கருத்துக் கொண்டிருந்தார். சொற்களுக்கு புதிய கருத்தளிப்பதில் அவர் வல்லுனராயிருந்தார். எதிர்வுவாதிகளின் கொள்கைகளில் சொற்களுக்கு 'கடந்தபொருள்' அளிப்பதும் ஒன்றாகும். சொற்கள் பழைமையைத் துறந்து புதுமை பேச வேண்டும் என்பது அவர்கள் கருத்து.

மாயகோவ்ஸ்கி இரசிய நாட்டின் ஒரு சிறந்த புரட்சிக்கவிஞர். இவர் 1893ல் பிறந்து 1930ல் காலமானார்.

அச்சொற்ப காலத்துக்குள்ளாகவே ஏராளமான கவிதைகளையும், சில நாடகங்களையும் இவர் எழுதினர். இவரது கவிதைகள் 13 தொகுதிகளாக அமைந்துள்ளன.

மாயகோவ்ஸ்கி தமக்கே உரிய ஒரு பா உருவை வைத்து அதில் இயல்பான சொற்கள் ஏற்றுவார். விடுகவிதையோடு ஒரு வண்ணத்தைப் பிணைத்துவிடுவார்.

இவர் தம் பாடல்களைக்கூட்டங்களில் பாடிக் காட்டுவார். உயரமான தோற்றமும், நல்ல பார்வையும், கனத்த குரலும், நேருக்கு நேர் விடைசொல்லும் திறனும் இவருக்குஅழியாத புகழைத் தேடிக் கொடுத்தன.

கற்பனைத் திறனிலும், அணிகளிலும், இயைபு முரண், தொடை, ஆகியவற்றிலும் அவர் மிக வல்லவராயிருந்தார். தம் கவிவளத்தில் அவருக்கு அசையாத நம்பிக்கை இருந்தது.

மனித குலத்தை அவர் நேசித்தார். மனித குலம் சீர்திருந்தி வருகிறது என்று அவர் நம்பினர். விஞ்ஞானத்தில் அவருக்கு அசையாத நம்பிக்கை இருந்தது.

குன்றாத ஆற்றலும் தணியாத ஓர் உள்ளவேட்கையும் கொண்ட இவர்க்குப் பொதுவுடைமையும் புரட்சியும் நல்லாறுதலைக் கொடுத்தன. தனிமனிதன் விருப்பு வெறுப்புகளுக்குப் பாடலில் இடங்கொடாத அவரே காதலில் மனதைப் பறிகொடுக்க நேர்ந்தது. தம் காதலைப் பற்றியும் பல பாடல்கள் பாடியுள்ளார். சோவியத்து நாட்டின் அரசுப்புலவர் என்று அவரைக் கூறலாம். அவர் காதலைப்பற்றிப் பாடியபொழுது எழுத்தாளர் சழகத்தவர் அவரைக் குறைகூறினர். ஆயின் ஸ்ராலின் அவரை இரசிய நாட்டின் ஒப்பற்ற கவிஞர் எனக் கூறிப் புகழ்ந்தார்.

இவர் தமது வாழ்நாளில் அமைதிகான முடியவில்லை. இவர் தம் முப்பத்தேழாம் வயதில் தற்கொலை செய்துகொண்டார். என்ன

ஒரு கூடைக் கொழுந்து
(சிறு கதைகள்)

என். எஸ். எம். ராமையா
விரைவில் வெளிவருகிறது.

காரணத்தினுல் தற்கொலை செய்து கொண்டார் என்று திட்டமாகக் கூற முடியாது. அவர் தற்கொலை செய்துகொள்ளுமுன் எழுதிவைத்த பாடல் இது.

''உலகவர் கூறுமாறு
முடிந்தது நிகழ்ச்சி.
நாள் முறைத்தொழும்பில்
நொறுங்கியது
காதற்படகு.
வாழ்வும் நானும்
பிரிந்தனம்
பகைதுயர்நோக்கலை
நம்முள் பரிமாறு
செய்வதில் பயனென்ன?''

உண்மையில் மாயகோவ்ஸ்கி வீரம் பொருந்தியவர். அவர் பாடல்களும் ஆற்றல் மிகுந்தவையே.

1917-ம் ஆண்டு ஒக்ரோபர் புரட்சியின்போது 'கலைச்சேனை'க்கு அவர் இட்ட கட்டளை,

''அரண்தடைபுகுமின்
தோழர்காள்!
வீதிகள் எம் தூரிகைகள்
சதுக்கங்கள்
எம்வண்ண அடர்கள்''

இவர் தம் பாடல்களில் பழைமையை அறுத்து, உணர்வினில் கொதிக்கும் சொற்களைப் புகுத்தி புதுமையை நிறுவினர். இவரின் பாடல்கள் இக்காலக் காட்சியை மெய்ப்பட விரிக்கும் இயல்புடையனவாயிருந்தன. இவர் ஓர் ஆக்சக் கவிஞர். எதிர்வருவதை கற்பனை கொண்டு அளந்து உண்மையினின்றும் பிசகாது மொழிந்தவர். புரட்சி அவருக்கு அந்த வன்மையை அளித்தது. அவரின் சொந்தப் புலமை அவருக்கு வழிகாட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபகாந்தன்

எழுதும்

விமர்சனப் பூசாரிகள்

இன்றைய உரைநடை வளர்ச்சியில் கலை - இலக்கிய விமர்சனங்கள் கணிசமாக இடம்பெற்று வருகின்றன. இவ்விமர்சனப் போக்கில் படைப்பாளியை வழி நடத்தப் பார்க்கும் முறையும், படைப்புக்களின் உத்வேகத்தால் ஈர்க்கப்பட்ட போக்குமாக இரு பெரும் பிரிவுகள் தென்படுகின்றன. இக்கணிப்பீட்டை வைத்துக்கொண்டு பார்க்கும்போது, எமது விமர்சனப் போக்கின் பாரம்பரியத் தளத்தைக் காட்டுவதற்கு நக்கீரனில் இருந்து, உரையாசிரியர்கள் ஊடாக வந்து, இன்றைய சினிமாக்காரிகளின் முகத்தில் சாயம் பூசும் 'போஸ்டர்கள்' வரை விமர்சிக்கும் மூத்த குடிகளாகி விட்டோம்.

எதையும் விட்டு வைக்காத போக்கும், பலதும் பத்திலும் கை வைக்கும் சுபாவமும் நம் விமர்சன வளர்ச்சிக்கு ஒத்தாசை புரிந்திருக்கின்றது என்று கூறின் அது வக்ர புத்தியாக மாட்டாது. வெட்ஸவின் 'தி லிட்ரரி கிரிடிக்ஸ்' போலவோ, அல்லது டி லோனரின் 'நியூ கிரிட்டிஸிஸம்' போலவோ நம்மிடையே விமர்சன நூல்கள் விற்பனையாகாவிட்டாலும் நமது விமர்சனத்துறை 'அஹோ' என்று வளர்ந்துதான் வருகின்றது.

ஒரு படைப்பிற்கு ஒரு நூல் விமர்சனமும், விமர்சனத்திற்கு இன்னும் ஒரு விமர்சன நூலும் வெளிவரும் காலகட்டத்தில் நாம் வாழ்ந்துகொண்டு இருக்கின்றோம்.

ஈழத்தின் கலை - இலக்கிய விமர்சனப் போக்கின் இந்த 'அசுர வேக' விமர்சன வளர்ச்சி ஏதோ ஒரு அர்த்தப்புஸ்டியான முனைப்பைக் கொண்டுதான் உள்ளது என்பதற்கு '......நூல் விமர்சனம்' என்ற வெளியீடு அமைந்துள்ளது.

இலக்கிய விமர்சனம் ஒரு நடுநிலையானதாக இருக்க வேண்டும். தனிப்பட்ட மனக்குரோதங்களின் வெளியீடாகவோ, ஒருவரின் சொந்த வாழ்க்கையைக் குத்திக் குதறிவிடும் குப்பையாகவோ, மாறில் அது ஒரு இலக்கியத் தரமுடைத்தாகாது எனப் பல விமர்சகர்கள் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் கூறிவந்திருக்கின்றனர். இந்த நூல் விமர்சனத்திலும் இதன் தொகுப்பாளர்களான திருவாளர்கள் எம். எஸ். எம். இக்பால் ஏ. இக்பால், எம். எச். எம். ஷம்ஸ் ஆகியோர் '......நூல் விமர்சனங்களைத் தொகுத்து வெளிவரும் இலக்கியத் தரம்வாய்ந்த முதல் முயற்சியை ஏன் செய்கிறோம்?' என்ற கேள்வியின் மூலம் தங்களின்

உயர்ந்த நோக்கத்தை 'இலக்கியத் தரம்வாய்ந்த முதல் முயற்சியை' தெளிவாக வெளிக்காட்டியுள்ளனர்.

இம்மூவரும் கலை - இலக்கியத் துறையில் பிரபலமானவர்கள். நாடறிந்த எழுத்தாளர்கள். விமர்சனப் பார்வையும் கொண்டவர்கள் இவர்களின் இந்நூலில் நீண்ட தொகுப்புரை ஒன்றையும் வெளியிட்டுள்ளனர். அதில்—

'இன்று ஈழத்து முஸ்லீம்களின் மத்தியில் 'சுபைர்' இளங்கீரன் என்னும் தலையும், தமிழர்கள் மத்தியில் 'இளங்கீரன்' என்னும் வாலுமாக நெளிந்து திரியும் விலாங்கின் வரலாறும் இங்கே. சுருக்கமாகப் பதிக்கவேண்டியது அவசியமாகின்றது' என்று குறிப்பிட்டுள்ளதைப் பார்க்கும்போது தொகுப்பாளர்களின் பலவீனமே வெளிச்சமாகின்றது.

ஒரு 'இலக்கியத் தரமான முதல் முயற்சியை' செய்ய முற்பட்ட இவர்கள் ஒரு எழுத்தாளனின் இலக்கியத்தைப் பற்றிய விமர்சனத்தை விடுத்து அவனது சொந்த வாழ்க்கையைத் துருவியாராய்ந்த கண்டுபிடிப்புக்களை வெளியிடுவதன் மூலம் இவர்கள் சாதிக்க விரும்புவது தான் என்ன?

எழுத்தாளரும், பத்திரிகையாளருமான 'இளங்கீரன்' என்ற நாவலாசிரியனின் இலக்கியப் பாதிப்புக்களை விமர்சிக்க முடியாத பலவீனத்தை, சொந்த வாழ்க்கையைப் புட்டுக் காட்டுவதின் மூலம் சமன்படுத்தப் பார்த்துள்ளனர் என்பதே தெளிவாகின்றது.

'பிரசுரவசதி செய்துகொடுக்கும் புரோக்கராகச் செல்வாக்குப் பெற்றவர்தான் எம். ஏ. றஹ்மான் என்னும் பிரகிருதி. ஈழத்தின் கலை-இலக்கிய விமர்சனமும், வரலாறும் எடுப்பார் கைப்பிள்ளையாக மாறி விட்டன. இக் கைங்கரியத்தை வரலாற்று மோசடியாகச் செய்து வருபவர்தான் எம். ஏ. றஹ்மான் என்னும் அமைதேயமாகும்' என்று எழுத்தாளரும், புத்தக வெளியீட்டாளருமான திரு. எம். ஏ. றஹ்மானைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள இவர்கள் 'சிலோன் ஸிப்பிங் சப்ளையர்ஸ்' ஸில் கணக்கப்பிள்ளையாக இருந்தது 'ரோட்டரி' அச்சகத்தில் வேலை பார்த்தது. 'றெயின்போ' பிரஸ் சொந்தக்காரர் ஆனது என தங்கள் மனக் குரோதங்களை இவ்வாறு தணிக்க முற்பட்டுள்ளனர்.

திரு. எம். ஏ. றஹ்மானின் இலக்கிய ஆக்கங்களைப் பற்றியோ அல்லது இலக்கியக் கோட்பாடுகளைப் பற்றியோ விமர்சித்திருப்பின் அது இலக்கிய விமர்சனப் பார்வைக்கு ஒத்தாசை புரிந்திருக்கும். இவ்வாறான எழுத்துக்களின் மூலம் இவர்களது பெருநோக்கே திசைதிருப்பப்பட்டிருக்கின்றது. சில்லறைக் கனமான 'சேஷ்டைகள்' இலக்கிய மோசடிக்கு உதவுவதோடு இருட்டடிப்பும் செய்துவிடும் என்பதை தொகுப்புரையில் பல பந்திகள் வலிவுறுத்தி நிற்கின்றன.

இலக்கியத்தின் பல்வேறு துறைகளில் பரிச்சயமுடையவரும் சிறுகதை நாவல் - விமர்சனம் போன்றவற்றில் ஒரு தனித்துவமான முத்திரையைப் பதித்தவருமான திரு. எஸ். பொன்னுத்துரையைப் பற்றிய இவர்களது கணிப்பில் — 'பலருக்கு எழுத்துத் தானம் செய்பவர். 'பிசாசு எழுத்தாளர்' என்று வர்ணிக்கப்படுகின்றார், பிணக்கு ஏற்படும்போது சொல்லிக்காட்டுவார். பிணக்கு

அடுத்த
இதழில்
பாரதியார்
பற்றி

மறு
பரிசீலனை
செய்கிறோம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

With the Best Compliments

from

BALANS

BORELLA.

WITH THE BEST COMPLIMENTS

OF

Ahmed Company

Textile Dealers

52, SEA STREET, COLOMBO-11.

T'Phone: 29414 T'Grams: "AHMEDCO"

WITH THE BEST COMPLIMENTS

OF

NEW MAGAZINE SHOE PALACE

No. 55, Baseline Road,

BORELLA.

With Best Compliments

from

LIBERTY TRADERS

47, 2nd Cross Street,

COLOMBO-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH THE BEST COMPLIMENTS

OF

KINGSLEY PLACE

328, Baseline Road,
DEMATAGODA - COLOMBO-9.

T'Phone: 91661

With Best Compliments

from

S. GOVINDASAMY

65, Bonjan Road,
KOTAHENA - COLOMBO-13

செப்டம்பர் மாதம் முதல்
வெள்ளித் திரை விருந்து!

ஈழத்துத் திரைப்பட உலகில்
ஒரு புதிய திருப்புமுனை!

V. P. கணேசன்

அளிக்கும்

கணேஷ் பிலிம்ஸாரின்

புதிய காற்று

கதை வசனம்

தெளிவத்தை ஜோசப்

தயாரிப்பு

V. P. கணேசன் J.P.

இசை

T. F. லத்தீப்

எடிடிங், டைரக்‌ஷன்

எஸ். ராமநாதன்

ஒளிப்பதிவு

லினிடிகொஸ்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



...itor Eelavanan and Published by [illegible] 33, Lauries Road, Colombo-4
Lanka. Printed at ... Printers, Negombo.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org